இருக்கிறார்கள். அந்தச் சம்பள விகிதங்கள் வரைமுறை படுத்தப்பட்டு, ஒழுங்கு படுத்தக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. குழு ஆராய்ந்து தந்த அறிக்கையின்படி நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விகள் 318, 319, 320, 321, 322 ஆகியவை பின்னர் எடுத்துக் கொள்ளப்படும்.

Loan scholarships to students of Veterinary College.

* 323 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether loan scholarships have been discontinued for the students of the Veterinary College from this year; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

மாவட்ட அளவில் சிறு தொழில்களுக்கான குழு

* 324 வினா—திரு. சு. துரைசாமி:
திரு. கே. விநாயகம் : } மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு தொழில்களுக்கு உதவ மாவட்டந்தோறும் ஆலோசனைக் குழு அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) சிறு தொழில்கள் நிறுவுவது குறித்து மாவட்டங்களிலுள்ள பல்வேறு அதிகாரிகளால் ஒப்புதல் வழங்குவதிலும், உரிமம் வழங்குவதிலும் ஏற்படுகின்ற காலதாமதத்தைக் கண்டுபிடித்து நீக்குவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், அரசுச் சார்புள்ளவர்களையும், அரசுச் சார்பற்றவர்களையும் உறுப்பினர் களாகவும் கொண்ட மாவட்ட அளவிலான குழு ஒன்றை அமைக்குமாறு தொழில் துறையின் (சிறப்பு) 13-5-1970-ம் நாளிட்ட 1125-ம் எண்ணுள்ள அரசு ஆணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. தொழிற்சாலை நிறுவுவது குறித்துப் பெறப்பட்டுள்ள மனுவின் பேரில் இரண்டு வாரங்களுக்கும் மேலாக முடிவு எதும் எடுக்காமல் இருக்கிற மாவட்ட துறை அதிகாரி, ஒவ்வொரு வரும், அக்காலதாமதத்திற்குச் சரியான விளக்கத்துடன் மேற்சொன்ன குழுவின் நாட்டத்திற்கு அதைக் கொண்டுவருவதற்குப் பொறுப்பாளியாவார். பாதிக்கப்பட்ட தொழில் முனைவர்களும், காலதாமதமான நேர்வுகள் குறித்து நேரடியாக இக்குழுவின் தலைவருக்கு எழுதலாம்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, தொழில்களைத் துவக்கும் நேரத்தில் தொழிற்சாலைச் சட்டத்தின் அடிப்படையில் சில விதி விலக்குகள் தரவேண்டும். தொழிற்சாலை துவக்குகிற நேரத்தில் தொழிற் சாலைச் சட்டத்தின் அடிப்படையில் எதேனும் சிறிது சலுகை அக்குழு சிபார்சு செய்தால், அதை விலக்க அந்தக் குழுவுக்கு அதிகாரம் உண்டா?